சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாடு

வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இதை மேலும் ஈர்க்கும் விதமாக சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டை தமிழக அரசு 2024-ம் ஆண்டு நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ரூ. 100 கோடி செலவில் இம்மாநாட்டை நடத்துவதன் மூலம் பல புதிய நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க வாய்ப்பு உருவாகும் என தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. இது தொடர்பான அறிவிப்பை தமிழ்நாடு நிதி அமைச்சர் தனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் வரிசையில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.

கடந்த 2021-22-ம் நிதி ஆண்டில் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இதன் மூலம் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூ. 68,375 கோடி. இதனால் 2.05 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும்.

# எல்லையை விரிக்கும் எண்ணும் எழுத்தும்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றார் ஔவையார். அடிப்படையில் மனிதர்கள் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டால் போதும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை விஷயங்களை அறிந்துகொள்ள முடியும். சிறுவயதிலேயே, பள்ளிப்படிப்பின்போதே அதற்குச் சரியான முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களுக்கு எண்ணையும் எழுத்தையும் உரிய வகையில் கற்றுத் தருவது கல்வியின் ஒரு பகுதியாகும். ஆகவே, சிறுவர்களுக்கு எண்களையும் எழுத்துகளையும் முழுமையாகக் கற்றுத் தருவதற்காகவே தமிழ்நாடு அரசு ஒரு தனித் திட்டத்தையே அறிவித்து செயல்படுத்திவருகிறது. அந்தத் திட்டம் எண்ணும் எழுத்தும். 2025 ஆம் ஆண்டுக்குள் எட்டுவயதுக்குட்பட்ட சிறுவர் அனைவருக்கும் அடிப்படையான எண்களையும் எழுத்துகளையும் கற்பிக்கும் நோக்கத்தில் 2021-22 ஆம் கல்வியாண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தால் 15,89,235 மாணவர்கள் பயனடைவார்கள். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவருவதை அடுத்து வரும் கல்வியாண்டில் ரூ.110 கோடி செலவில் நான்காம் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. தொடக்கக்கல்வி முடித்துவரும் மாணவர்கள் எண்ணிலும் எழுத்திலும் எந்தச் சிக்கலும் இல்லாமல் அடிப்படையைக் கற்றுத் தேர்ந்து வரும்போது, உயர்நிலைக் கல்வியும் மேல்நிலைக் கல்வியும் உயர்கல்வியும் அவர்களுக்கு எளிதாக வசப்படும் என்பதைத் தனியாகச் சொல்லவும் வேண்டுமோ?